# பாதுகாவலன்
PATHUKAVALAN


14. யாழ். பேராலயம் 190
15. நாரந்தனை 171
16. சுன்னாகம் 153
17. இரணைதீவு 152
18. உரும்பிராய் 150
19. யாழ். யுவானியார் 135
20. பண்டத்தரிப்பு 132
21. நீர்கொழும்பு 126
22. நெடுந்தீவு 121
23. செக்கட்டித்தெரு 120
24. விடத்தல்தீவு 115
25. பண்டிவிரிச்சான் 110
26. புதுக்குடியிருப்பு 100
27. மயிலிட்டி 96
மொத்தப் பிரதிகள் 8965

RECEIVED 6- 11 Periodicals Division Library

மலர்: 116 இதழ் : 18 25–5–1990 (மே 25 — ஜுன் 1) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/==

### யாழ். ஆயர் தலைமையில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் வெளியீடு

# அயர்லாந்து தேசத்து மறைப்பணியாளருக்கு தேசிய வீரர் தினத்தில் நினைவு முத்திரை

**1954ஆம் ஆண்டு வரை 18 ஆண்டுகள் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபராக அரும்பணியாற்றிய வண. ரீ. எம். எவ். லோங் அ ம. தி. அடிகளாருக்கு இலங்கை அரசானது தபால்தலை ஒன்றை வெளியிட்டு அவர் ஈழத்திரு நாட்டுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவையைக் கௌரவித்துள்ளது.**

மே மாதம் 22 ஆம் திகதி தேசிய வீரர் தினத்தன்று இலங்கை அரசானது கத்தோலிக்க மதத்தலைவருக்கு ஒரு தபால் தலை ஒன்றை வெளியிட்டு திருச்சபையை கௌரவித்துள்ளது.

தமிழ் மண்ணுக்கும், மக்களுக்கும் அவர் ஆற்றிய சேவையைப் போற்றும் அரசு கொழும்பில் திருமலை–மட்டு நகர் ஆயர் பேரருள்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையையும் யாழ். நகரில் யாழ். ஆயர் பேரருள்திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகையையும், நினைவு முத்திரை வெளியீட்டுக்கு முக்கிய விருந்தினர்களாகத் தெரிந்து கொண்டது.

அயர்லாந்தில் பிறந்த வண. லோங் அடிகளின் மற்ற இரு சகோதரர்களும், அருள்தந்தையராகவும் ஒரே சகோதரியும், அருட்சகோதரியாகவும் தம்மை இறைஊழியத்துக்கு அர்ப்பணித்தனர்.

1921 முதல் 1954 வரை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றிய அடிகளார் சமய, சமூகப்பணிக்காக வாழ்ந்த காரணத்தினால் மக்களால் பெரிதும் போற்றப் பட்டார்.

இதுவரை இலங்கை அரசு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. கொழும்பு சென்யோசப் கல்லூரி அதிபர் வண. பீற்றர்பிள்ளை அ.ம.தி., மட்டுநகர் சென்மைக்கல்ஸ் கல்லூரி அதிபர் வண. பேர்டினன்ட் பொன்னல் சே. ச., கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி அதிபர் வண. லெகொக் அ.ம.தி., கருதினால் கூறே அ.ம.தி. ஆகியோருக்கு முத்திரை வெளியிட்டுள்ளது.

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்களின் இடைவிடாதமுயற்சியின் பலனாக இந்நினைவு முத்திரை வெளிவந்துள்ளது.





யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மதுரம் சதுக்கத்தில் நடைபெற்ற வணபிதா லோங் அடிகளாரின் நினைவு முத்திரை வெளியீட்டு வைபவத்தில் யாழ். ஆயர் பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு, வடபிராந்திய த்பால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் முதல் தபால் தலையை வழங்குகின்றார்.

## தாய்த் திருச்சபையுடன் இணைய முயற்சி

போலந்துக் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து சென்ற தேசியக் கத்தோலிக்க சபை மீண்டும் தாய்த் திருச்சபையுடன் இணைவதற்கான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படுவதாக அந்நாட்டின் கத்தோலிக்க ஆயர் ஸ்ரனிஸ் லொஸ் பிரட்சானா உரைத்தார். இரு தரப்பினருக்கிடையே கடந்த 5 வருடகாலமாக இடம்பெற்றுவரும் ஒன்றிப்பிற்கான பேச்சு வார்த்தைகளின் பயனாய் உருவாகிய கிறிஸ்துவுடன் இணைந்த பயணம் என்ற 96 பக்க ஏட்டை வெளியிட்ட போது ஆயர் இதனை உரைத்தார்.

திருமுழுக்கு, நற்கருணை போன்ற கலந்துரையாடலில் இரு தரப்பினரும் ஒத்த கருத்தினைக் கொண்டிருக்கின்றனர் என உரைத்த ஆயர் பிரட்சானா, திருத்தந்தையின் தலைமைத்துவம், மற்றும் தேசிய கத்தோலிக்க திருச்சபையை நிறுவியது, திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டது போன்றவைகளே இரு தரப்பினருக்கிடையே தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகளாக உள்ளனஎன்றார்.

1897–ம் வருடம் திருப்பீடத்தை எதிர்த்து தேசிய கத்தோலிக்க சபையை நிறுவியதற்காக ஆயர் பிரான்சிக்கோ 1898–ம் வருடம் திருச்சபையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டார். போலந்தில் தேசிய கத்தோலிக்க சபையில் 2, 50, 000 க்கும் மேற்பட்ட அங்கத்தினர்உள்ளனர்.

## மறையாசிரியர் கருத்தரங்கு

சிலாப மறைமாவட்டத்தைச் சேர்ந்த மறையாசிரியர்களின் இரண்டு நாள் கருத்தரங்கு சித்திரை மாதம் 30 ஆந் திகதியும், வைகாசி மாதம் 1 ஆந் திகதியும் தலைவில்லு புனித அன்னம்மாள் திருப்பதியில் இடம்பெற்றது.

சிலாப மறைக்கல்வி இயக்குனர் அருள்தந்தை ஆனந்த அருள்தந்தையர்களான திமோத்தி ஞானப்பிரகாசம், இம்மானுவேல் சாள்ஸ் ஆகியோர் கருத்தரங்கைத் திறம்பட நடத்தினர். சிலாபம், கருக்குப்பனை, மங்களவெளி, கட்டைக்காடு, புத்தளம், தேத்தப்பளை, கற்பிட்டி ஆகிய பங்குகளைச் சேர்ந்த அறுபது மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர். ஏழு அருட்சாதனங்கள், இன்றைய உலகில் திருச்சபை, புராதனக் கிறிஸ்தவர்களும் இன்றைய கிறிஸ்தவர்களும், மறையாசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவை பற்றிய விரிவுரைகளும்,குழுஆய்வுகளும் நடத்தப்பட்டன. அருட்சகோதரி ஜசிந்தா, திரு. கிறிஸ்ரோப்பர் ஆகியோரும் உரைகள் ஆற்றினர்.

மறைக்கல்வி இயக்குநர் அவர்கள் இவ்வருடம் 2 ஆம் தவணைக்கான ஆசிரியர் கைநூல்களை மறைஆசிரியர்களுக்கு வழங்கினார்.

உரு. A E. பெர்னாண்டோ.

## அன்னைக்கு அழைப்பு

யூகொஸ்லாவியாவில் கோசே பிறிசின் ஆயர் நிக்கொலே யூகொஸ்லாவியா வரும்படி அன்னை திரேசாவிற்கு முறையான அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பை ஏற்று அன்னை திரேசா வருகிற ஒக்டோபர் மாதத்தில் யூகொஸ்லாவியாவின் கோசே பிராந்தியத்திற்குப் பயணம் செய்வார் என நம்பப்படுகிறது. கோசேபிராந்தியத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் அல்பேனியர்கள் என்பதும், அன்னை திரேசாவும் அல்பேனிய இனத்தை சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### தேசிய வீரர்

இலங்கை அரசாங்கம் அமரர் அருள்திரு. ரீ. எம். எவ். லோங் அ. ம. தி. அடிகளுக்கு தேசிய வீரர் தினத்திலே ஒரு நினைவு முத்திரையை வெளியிட்டு அயர்லாந்தில் பிறந்து நமது மண்ணில் பணியாற்றிய வீரரைக் கௌரவிக்கின்றது.

1921 ஆம் ஆண்டு சம்பத்திரிசியார் கல்லூரியில் காலடி எடுத்து வைத்த வண. லோங் அடிகளார் 1936 முதல் 1954 வரை கல்லூரி அதிபராகப் பணியாற்றி தற்கால பெரும் தலைவர்களின் உருவாக்கலுக்கும், வளர்ச்சிக்கும் வித்திட்டார்கள்.

ஏப்ரல் 30 ஆம் திகதி அடிகளின் 29 வது நினைவுதினத்தன்று மேற்படி நினைவு முத்திரையை வெளியிட விரும்பிய போதிலும் அரசாங்கம் தேசிய வீரர் தினத்தையே அதற்குரிய நாளாகத் தெரிந்தெடுத்தது.

அயர்லாந்து தேசத்தில் பிறந்தவராக இருந்த போதிலும் நமது மண்ணுக்கும், மக்களுக்கும் அவர் ஆற்றிய சேவையின் காரணமாக நம் வீரர்களில் ஒருவராக எண்ணப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்.

கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் இவர் தமிழர்களில் இலக்கியங்கள், கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றைப் போற்றிவந்தார். சம்பத்திரிசியார் கல்லூரி நூலகத்தில், பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி தமிழ் இலக்கியத்துடன் தொடர்புடைய ஏராளமான நூல்களைக் குவித்து வைத்து மாணவர்களுக்குப் பெரிதும் உதவினார்.

பொது நலனில் அக்கறை கொண்டவராக யாழ்ப்பாண மக்கள் அனைவருக்கும் பயன்தரக் கூடிய விதத்திலே பொது நூல்நிலையத்தை உருவாக்கி வழிசமைத்தார். அவர் திட்டப்படி நிறுவப்பட்டயாம். பொதுசன நூல்நிலையம் எரியுண்டநிலையில் இன்று காட்சி தந்த போதிலும் அப்பளுக்கற்ற விதத்திலே சிங்காரத்தோற்றத்துடன் அங்கு காட்சி அளிக்கும் அவரது உருவச்சிலை, அவரது பணியின் நீங்காத நினைவின் சின்னமாகவுள்ளது,

ஐரோப்பிய மிசனரிமாருடைய அயராத முயற்சியின் பயனாகவே எமது நாட்டில் எழுத்தறிவற்றவர்கள் வெகு சொற்பமாகவுள்ளார்கள். வண லோங் அடிகளார் இம்முயற்சியில் பெரிதும் ஆர்வமுடன் ஈடுபட்டவர். இவரது முயற்சியின் பலனை வடமாகாண மாணவர்களே பெற்றனராயினும், இம் மாணவர்கள் இலங்கை முழுவதும் பல்வேறு தொழில் துறைகளை ஏற்று முழு இலங்கையின் வளர்ச்சியிலும், தமது பங்களிப்பை நிறைவாக ஆற்றி வருகின்றனர்.

அயர்லாந்தில் இருந்து இங்கு வந்து அவர் இலங்கைக்குப் பணிபுரிந்த வேளையிலே இலங்கை மக்களின் நலனையே தனது அபிலாசையாகக் கொண்டு செயற்பட்டார். அவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் அவரைப் பூரணமான இலங்கையனாகவே கண்டு போற்றினார்கள். நாட்டிலும், மக்களிலும் அவருக்கிருந்த அக்கறையைக் கண்டு மக்கள் தங்கள் பிறப்பினால் மட்டுமே இலங்கையர் என்றும், இவர் உண்மையான இலங்கையர் என்றும் புகழ்ந்துரைத்தனர்.

வடபகுதிக்கான விமானசேவை நடைபெறுவதற்கும் பிதா காரணமாக இருந்தார். யாழ்ப்பாண மக்கள் அக்காலத்தில் அடர்ந்த காடாகவிருந்த கிளிநொச்சி வரை குடியமர்த்தப்படவேண்டும் எனத் திட்டம் வகுத்தார்.

1940 களில் அவர் எமது பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி பத்திரிகைக்கு பெருமையைத் தேடித்தந்திருக்கிறார்.

நீண்டகாலமாக இலங்கை இராணுவத்தின் ஞானக் கடமைகளுக்கு சிரேஷ்ட பொறுப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

எமது தாய்த்திரு நாட்டிலே பல துறைகளிலும் பயனுள்ள முறையில் பணியாற்றி அவற்றின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் காரணரான வண. லோங் அடிகளை தேசிய வீரர் தினத்திலே பெருமையோடு நினைவுகூர்வது சாலப் பொருத்தமே!

## தேனருவி

### விண்ணேற்பு விழா (27-05-90)
### வீட்டுப் பாடம் செய்யாமல்

பட்டமளிப்பு விழா, பரிசில் வழங்கும் விழா எனப் பாராட்டுதலும், வெகுமதிவழங்குதலும், கௌரவிப்பதும் நாம் பொதுவாகக் காணும் காட்சிகளில் ஒரு வகை. கற்பவருக்கும், உழைப்பவருக்கும் இப்படிப்பட்ட விழாக்கள் உற்சாகமும், நிறைவும் அளிக்கின்றன.

கண்விழித்துப் படிக்காத மாணவ மணிகள் பரிசில்களைத் தட்டிக்கொள்வது கடினம். அயராது உழைக்காத தொண்டர்கள் கௌரவிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறுவது பகற்கனவு. பயிற்சி பெறாத விளையாட்டு வீரன் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றுவது எப்படி?

இயேசுவின் விண்ணேற்பும் ஒருவிதத்தில் அவரது தாழ்ச்சிக்கும், தியாகத்திற்கும் வளங்கப்பட்ட பரிசு, பட்டம், கௌரவிப்பு. ''வானமேகங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டார். அனைத்துத் தூதருக்கு மேலாகவும், எப்பெயருக்கு மேலாகவும் உயர்த்தப்பட்டார். விண்ணிலும், மண்ணிலும் எல்லா அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது. தந்தையின் அரியணையில் வலப்பக்கம் வீற்றிருக்கிறார்'' போன்ற அனைத்து வேதவாக்கு யாவும் இயேசு கௌரவிக்கப்பட்டார் என்ற உண்மையையே வெளிக்கொண்டு வருகின்றன.

வானத்தை அண்ணார்ந்து பார்த்து காட்சியில் திளைத்துப்போய் இருந்த சீடர்களைத் தட்டியெழுப்பி செயலுக்கு அனுப்புகிறார்வானதூதர்கள். கலிலேயாவின் மலையில் வணங்கி நின்ற தம் சீடரைத் தம் பணி தொடர அனுப்புகிறார் இயேசு. இதனால் இயேசுவின் இவ்வுலக வாழ்வின் இறுதியில் கிடைத்த விண்ணேற்பு சீடர்களுடைய வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அப்போஸ்தலரின் பணியும் இக்கட்டத்தில்தான் ஆரம்பமானது. புதிய யுகமே அரும்பியது இக்கணத்தில் தான்.

வெற்றிக் கிண்ணத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலோடு தினமும் முயற்சி செய்கிறான் ஒரு வீரன். அது போல இயேசுவின் ஒவ்வொரு சீடரும் விண்ணகத்தை இலக்காகக் கொண்டு விரைகின்றனர். அதனால் இயேசுவின் விண்ணேற்பு நம்பிக்கையும், உற்சாகமும், ஊக்கமும் தரும் வெற்றிக் கேடயமுமாக அமைகிறது.

இன்று கைக்கூலி கொடுத்து மாலை போட வைக்கும் 'அரசியல்வாதி' களுக்கு, குறுக்கு வழிகளூடாக கௌரவப் பட்டங்களை உரிமையாக்கிக் கொள்ளும் ஏமாற்றுக்காரர்களுக்கும் இயேசுவின் விண்ணேற்பு ஒரு சவால். குதிரை ஓடி பரீட்சையில் ஒருவேளை தேர்ச்சியடையலாம். தனக்குத் தானே தம்பட்டம் அடித்து, சுயவிளம்பரம் செய்து சில காலம் போலியில் இன்புற்று இருக்கலாம். ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்றவும் முடியாது. அதனால் ஏமாந்து போவதும் அவரே.

பாடு இன்றிப் பட்டம் இல்லை என்று திடமாகக் கூறி வைத்து விட்டனரே.

இயேசுவின் விண்ணேற்பு ஒரு அழகுக் காட்சியாகவோ, கற்பனையாகவே மறைந்து விடக் கூடாது. அவருக்குத் தந்தையாம் கடவுள் வளங்கிய ஒரு சலுகையாகவோ, விதி விலக்காகவோ கருதப்படவும் கூடாது. விண்ணேற்பு மறை உடலின் தலையாகிய கிறிஸ்து பெரும் விலை கொடுத்து சம்பாதித்த சொத்தாக இருக்க வேண்டும்.

வீட்டுப்பாடம் சரியாகச் செய்தால் வெகுமதி தப்பித்துப் போகாது. விண்ணகம் எமது தாயகம். அது எமது தணியாத தாகம். அதை அடைய நீ கொடுக்கும் விலை என்ன? செய்யும் முயற்சிதான் என்ன?

எம் வாழ்வில் விண்ணக வாழ்வுக்காக புரியும் தியாகங்களும், செய்யும் கடின உழைப்பும் கொள்ளும் நம்பிக்கையும், என்றும் பொய்க்காது. வீண் போகவும் மாட்டாது.

சுவாமி ஜீவா போல் (அ.ம.தி.)

அப். பணி. 1:1–11 அவர் மேலே உயர்த்தப்பட்டார்.
எபே. 1:17–23 வலப் புறத்தில் அமரச்செய்தார்.
மத். 28:16–20 விண்ணிலும் மண்ணிலும் அதிகாரம் உண்டு.

## வேதாகம வினாவிடைப் போட்டி-33

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 15–6–90 இற்கு முன் 'பாதுகாவலன்' அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

பரிசு ரூபா 25|-

விடைகளை 1 அரசர் (1–6) இல் காணலாம்.

**வினாக்கள்**

1. தாவீது அரசன் சாலமோனை எந்தக் கோத்திரங்களுக்குத் தலைவனாக நியமித்தான்?
2. யோவாபின் உடல் எங்கே புதைக்கப்பட்டது?
3. சாலமோன் அரசன் கட்டிய கோவில் எந்த மரப்பலகைகளால் மூடப்பட்டிருந்தது?
4. ஆலயத்தில் அடித்தளத்தை அழகு படுத்தப் பாவிக்கப்பட்ட பொருள் யாது?
5. சாலமோன் ஆண்டு தோறும் ஈராமுக்கு என்ன கொடுத்து வந்தான்?
6. I சாலமோன் காலத்தில் எழுத்தர்களாய் இருந்தவர்கள் யார்?
   II சாலமோன் எழுதியவை எவை?

**போட்டி 32 இன் சரியான விடைகள்**

1. 300 பலம் நிறையுள்ளது.
2. தாவீதினுடையவை.
3. காத் என்பவர் மூலம் முன்னறிவித்தார்.
4. I குறித்த காலம் வரை கொள்ளை நோய் வரச் செய்தார்.
   II எழுபதினாயிரம் பேர் இறந்தார்கள்.
5. ஆண்டவருக்கு ஒரு பலிப்பீடத்தைக் கட்டித் தகனப் பலிகளையும், சமாதானப் பலிகளையும் ஒப்புக் கொடுத்தார்.

**பரிசுபெறும் நற்பேறாளர்:-**

T. விஜி.
இல. 2. 16 A. குளம் வீதி,
மட்டக்களப்பு.

இம்முறை 55 பேர் சரியான விடைகளை எழுதியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

**வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பைக்காக்க உயிரைக் கொடுத்த புனித மரியகொறெற்றி

வேதவிசுவாசத்துக்காக உயிர்களைப் பலியாக்குபவர்களை மாத்திரமல்ல, தங்கள் புண்ணியத்துக்குப் பங்கம் வரவிடாது உயிரைக் கொடுப்பவர்களையும் திருச்சபை வேதசாட்சிகள் என ஒப்புக்கொள்கின்றது. எங்கள் சீவிய காலத்திற்கான தனது உயிர் போனாலும் கற்புக்கு எவ்வித பங்கமும், வரவிடச் சம்மதியாது மிகவும் கொடூரமான விதமாகக் கொலையுண்ட ஒரு இளம் கன்னியின் கதை இதோ!

இவளுடையபெயர் "மரியகொறற்றி." இவள் 1890 ஆம் ஆண்டு பிறந்து 1902 ஆம் ஆண்டில் கொல்லப்பட்டாள். இவளுடைய பெற்றோர் இவ்வுலக செல்வுங்களில் பெரியவர்களல்ல. ஆனால் வேத விசுவாசத்தில் மகா செல்வர்களாயிருந்தார்கள். இவர்கள் சாதியில் இத்தாலியர். வறுமையின் நிமித்தம் தமது சொந்த ஊரை விட்டுப் பிறஊர் சென்று பிழைத்து வந்தார்கள். இவர்களுள் மூத்த பிள்ளையே மரிய கொறற்றியாவாள்.

அசுந்தா என்று பெயருடைய அவளுடைய தாயானவள் தனது கணவன் இறந்த பின் யோவான்னி செறெனேலலிஸ் என்ற ஒருவனின் குடும்பத்தவருடன் சேர்ந்து கணவனுடைய பொருத்த வேலையைத் தொடர்ந்து நடத்தி வந்தாள்.

மேரி ஒன்பது வயசுள்ள பிள்ளையாக இருந்தாலும் தாய் படும் துன்பங்களை நன்கு கவனித்துத் தாய்க்கு ஒரு சம்மனசு போல அன்போடு ஆறுதல் சொல்லி வருவாள்.

இந்தப் பாலிய சம்மனசின் ஆறுதலான பேச்சு அசுந்தாவுக்கு உள்ளபடி அவசியமாகவே இருந்தது. ஏனெனில் இந்த விதவையின் கஸ்டங்கள், கவலைகள் வரவர அதிகரித்துக்கொண்டே வந்தன.

மரிய கொறெற்றியும், செறெனேலிஸ் என்பவனும் ஒரே கமத்தில் வேலை செய்து வந்தார்கள். இந்த செறெனேலிஸ் என்பவனுக்கு அலெக்சாந்தர் என்னும் வாலிப வயதுடைய மகன் இருந்தான். இவன் மரியகொறெற்றியில் எப்போதும் கண்ணும், கவர்ச்சியும் உள்ளவனாக இருந்து வந்தான்.

ஒரு நாள் தாய் வயலில் வேலையாய் இருக்கும்போது அலெக்சாந்தர் வெளித்தோற்றத்தளவில் வெகு அனமதியுடன் மரிய கொறெற்றி இருந்த மேல் வீட்டை நோக்கி சென்றான்.

இவனைக் கண்டவர்கள் இவனுடைய உள்ளத்தில் மூண்டு எரிந்து கொண்டிருந்த எரிமலை எப்படிப்பட்டதென எளிதில் ஊகித்து அறிந்து கொள்ளக்கூடியதாய் இல்லை. அலெக்சாந்தர் பரபரப்புடன் மேல் வீட்டுக்குச் சென்று மேரி இருந்த இடத்துக்கு அருகாமையிலுள்ள ஓர் அறைக்குள் புகுந்தான். இவன் எப்படிப்பட்டவன் என்பதை ஏலவே நன்கறிந்த மேரி உள்ளம் நடுங்கிய வண்ணம் ஓர் சட்டைக்கு இழை போட்டுக் கொண்டிருந்தாள். அலெக்சாந்தர் ஒரு அடி நீளமுள்ள இரும்புஈட்டி ஒன்றைக் கையில் வைத்திருந்தான். சற்றுப் பொறுத்து அவன் மேரியை நோக்கி "அறைக்குள்ளே வா" என்று கீழ் குரலில் சொன்னான். "ஏன் உள்ளுக்குள் வருவான்? உனக்கு என்ன வேணும்"? "உள்ளே வா?"!

"இல்லை. ஒரு போதும் இல்லை. வரமாட்டேன்" அந்த வேளை மேரி எழுந்து இறங்கி ஓட அவன் நேரம் கொடுக்கவில்லை. அவளை வலோற்காரமாகப் பிடித்து இழுத்து அறைக்குள் புகுத்தி விட்டு ஒரு உதையோடு கதவைச் சாத்திப் பூட்டிவிட்டான்.

மேரிக்கு முத்திப் பேறு பெற்ற பட்டம் கொடுப்பதற்கு திருச்சபை சட்டப்பிரகாரம் செய்த விசாரணையில் அவள் அடைபட்டிருந்த அறையில் பத்து நிமிடமாக நடந்தது என்னவென்று வெளியிடப்பட்டிருந்தது. நடந்த சம்பவம் ஒரு பக்கத்தில் மிகவும் குரூரமான சாத்தானின் செயல், மறு பக்கத்தில் மேரியின் திடசித்தமானது அவளில் விளங்கிய தெய்வீக செயலையும் தெளிவாகக் காண்பிக்கிறது. சாதாரணமாக சாந்தமுள்ள செம்மறிப்புருவை போல இருந்து வந்த மேரி, அலெக்சாந்தர் என்ற சாத்தானின் முன்உக்கிர வேகங் கொண்ட சிங்கேறு போலத் தனது தேடற்கரிய திரவியமாகிய கற்பைப் பாது காப்பதற்காக கிறுங்கா மனத்தினளாய்ப் போராடினாள்.



இதனால் மிகவும் கொடூரமான முறையில் அலெக்சாந்தானால் ஈட்டியால் கொல்லப்பட்டு மரித்தாள்.

"அவள் என் கேள்விக்கு இணங்காவிட்டால் அவளைக் கொன்று போட ஏலவே தீர்மானித்திருந்தேன். 'தேவ கற்பனைக்கு முற்றும் விரோதமான செயலை நான் செய்கிறேன் என்பதை நன்றாக அறிந்திருந்தேன். மேரி எனது கேள்விக்கிணங்க வேண்டுமென்று பிடிவாதமாய் இருந்தேன். அவள் மறுத்தபடியால் அவளைக் கொலைபுரிந்தேன். என்னை எதிர்த்து நின்றபடியால் அவள் பெரும் புண்ணியவதி ஆனாள். ஒரு சிறுவார்த்தையினாலாவது, புன்னகையினாலாவது அவள் என் விருப்புக்கு சார்பு காட்டினவளல்ல" என்று அலெக்சாந்தர் அறிக்கையிட்டான்.

ஆதலால் மேரி கற்பின் கிரீடத்தையும், பிராணபரித்தியாகத்தையும் பெற்றுக்கொண்டபடியால் "இரு [illegible]டிக் கிரீடம் சூ[illegible]னாள்" என்று சொல்லப்படுகிறது.

**செல்வி. ஜெனோவா சிமான்பிள்ளை**
பெரிய நிலாசேனை
உயிலங்குளம்
மன்னார்.

## கலைநிலா

## வித்துக்கள் நூல் வெளியீட்டு விழா

சிறிது காலம் முன்பு வரை ஆலயத்திருவிழாக்களில் மட்டும் ஆடப்பட்டும், தாழ்த்தப்பட்டோரின் கலைவடிவம் என்று கருதப்பட்டும், வந்த நாட்டுக்கூத்து இன்று புத்தெழுச்சி பெற்றிருக்கிறது. ஈழத்தமிழ் மக்களின் ஒரே பாரம்பரியக்கலை என்ற அடிப்படையில் அதனை வளர்த்தெடுக்க பல்வேறு மட்டங்களில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வலையின் ஒரு வடிவம்தான் கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட வித்துக்கள் நாட்டுக்கூத்து நூல்.

மேற்படி நூல் கடநத 3ஆம் திகதி யாழ். திருமறைக்கலா மன்ற அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அருள்திரு. ஜெபநேசன் அடிகள் தலைமை தாங்கிய விழாவில் யாழ். ஆயர் அவர்கள் ஆசியுரை வழங்கினார். கலாநிதி இ. பாலசுந்தரம், விரிவுரையாளர் நாகேஸ்வரன், ஆசிரியர் எஸ். நாகராசா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கவிஞர் தேவதாசனுக்குப் போதியளவு புகழாரத்தை சிறப்புரை ஆற்றிய அனைவருமே வழங்கியிருந்தனர். ஆனால் கவிஞரின் எதிர்கால வளர்ச்சி கருதி நூலை விமரிசன நோக்கில் எவரும் ஆராயாது பெருங்குறைவாகவே இருந்தது. ஆகையால் அத்தகைய சில குறிப்புக்களை முன் வைப்பது கவிஞருக்கு நன்மை பயக்கும் என எண்ணுகிறேன்.

★ தென்மோடி நாட்டுக் கூத்து என்று அட்டைப்படத்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# 1990களை நோக்கி.......

# தூரத்துப்பார்வை

## அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்

**யாழ் மறைவட்ட வளர்ச்சி**

யாழ் மறைவட்டம் ஐந்து ஆயர்களை இதுவரை உருவாக்கிட்டது. இவர்களுள் எமிலியானுஸ் ஆண்டகை ஒருவர் தான் அமதிகளைச் சேர்ந்தவர். ஏனைய மறைவட்டங்களுக்கு ஆயர்களை உருவாக்கி அளிக்கும் அளவிற்கு யாழ் மறைவட்டம் வளர்ந்துள்ளது. இன்றைய ஆயர் பேரருட் திரு வ. தியோகுப்பிள்ளை அவர்களின் தலைமையில் யாழ் மறைவட்டம் பெரிதாக வளர்ந்துவிட்டது. கிட்டத்தட்ட 75 குருக்களைக் கொண்ட இம்மறைவட்டக் குருக்களின் சராசரி வயது 38 ஆனால் 47 அமதிகளைக் கொண்ட வடமாகாண அமதிகளின் சராசரி வயது 54. 4.

7

தனது சொந்த குருத்துவக் கல்லூரியை உருவாக்கிவிட்ட யாழ் மறைவட்டம், அக்கல்லூரிக்கு வேண்டிய விரிவுரையாளர்களையும் படிப்படியாக உருவாக்கி வருகின்றது. பங்குகள் தோறும் தமது குருக்களை நியமிக்குமளவிற்கு குருக்கள் எண்ணிக்கையிலும் வளர்ந்து வருகிறது, யாழ். மறைவட்டம் இப்படிப்பட்ட ஒரு வளர்ச்சியைப் பார்த்து மகிழும் அதே வேளை, அமதிகள் தங்களுக்குத் தாமே ஒரு பெருங் கேள்வியை எழுப்ப வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

**இனியும் அமதிகள் இங்கு தேவையா?**

வடமாகாண அமதிகளின் சேவை யாழ் மறைவட்டத்திற்கு தொடர்ந்தும் தேவைப்படுமா? யாழ் மறைவட்டப்பங்குகள் தோறும் மறைவட்டக் குருக்கள் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தும் வல்லமை பெற்றுவிட்ட யாழமறைவட்டத்தின தேவைகளுக்கு இனியும் அமதிகள் வேண்டுமா? பல இளம் அமதிகள் "இல்லை" என்றே விடை அளிக்கிறார்கள்.

**வேரூன்றாத் தன்மை!**

அமதிகளின் இலட்சிய நோக்கு துவக்கிய இடத்திலேயே வேரூன்றி நின்றுவிடுவதில்லை. அதாவது வந்த நோக்கம் நிறைவு கண்ட பின்னர், புதிய பணித்தளங்கள் நோக்கி புதிய பணிகள் நோக்கிச் செல்வது அமதிகளின் பரம்பரை நோக்கு. இதைச் சொல்லும் பொழுது மிக சுலபமாகத் தோன்றலாம். ஆனால், வேரூன்றாத் தன்மை ஒரு தனி மனிதனின் வாழ்வை, தனித்துவத்தை, ஆளுமையை பெரிதும் பாதிக்கும் என்பது உளவியல் கூற்றுமட்டுமல்ல, வரலாற்றில் நாம் காணும் உண்மையும் கூட. வேரூன்றாத் தன்மையினால் ஏற்படும் ஒரு நோவு அடையாளங் காணப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இவற்றையெல்லாம் பொதுமக்கள் கணக்கில் எடுப்பதில்லை.

பல ஆரோக்கியமற்ற அனுபவங்கள் நியாயப்படுத்தப்படுவதினாலும், பக்திப்படுத்தப்படுவதினாலும் மனித ஆளுமை பாதிக்கப்படுகின்றது. மனித ஆளுமை பாதிக்கப்படும் பொழுது மனித வளர்ச்சி பாதிக்கப்படும். மனித வளர்ச்சி பாதிக்கப்பட்டால் ஆன்மீக வாழ்வும் பாதிக்கப்படும்; மனித பணிகளும் பாதிக்கப்படும்.

அதனால், 'தோன்றிய மண்ணிலேயே வளர்ந்து, வேரூன்றி வாழ்ந்துவிடு' என்பது எனது வாதமல்ல. ஆனால், யதார்த்தமான நிலைப்பாடுகளை நியாயப்படுத்தாமல் பக்திப்படுத்தாமல் நெஞ்சத்து நேர்மையோடு ஏற்றுக்கொண்டு ஆவன செய்வது ஆரோக்கியமான வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் வழிகோலும் என்பது அனுபவ அறிவு.

**தேசிய நோக்கு**

அமதிகளின் பணிநோக்கிய சிந்தனை இம்மாநாட்டில் பல வினாக்களை எழுப்பத்தான் செய்யும். பணிநோக்கி அமதிகள் ஈழநாட்டின் ஏனைய மறை வட்டங்களுக்குச் செல்லக் கூடாதா? உதாரணமாக: மட்டுநகர் – திருமலை, பதுளை போன்ற மறைவட்டங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அங்கெல்லாம் அமதிகளின் பணி தேவைப்படுமா? ஆராயப்பட வேண்டிய ஒன்று.

வடமாகாணமாக அ.ம.தி.கள் உருவாகினாலும், தேசிய ரீதியில் அ.ம.தி.களின் பணிகள் வளரக்கூடாதா? உதாரணமாக: இன்று அமதிகளின் 'பிரசங்கிகள்' தேசிய ரீதி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரத்தில் ஒருவன்

சிறுகதை

பறவைகள் 'கீச்...கீச்' என இன்னிசை பாடிக்கொண்டிருந்தன. எங்கேயோ கேட்ட கோயில் மணியோசை கூடவே அதனுடன் சேர்ந்து தாளம் போட்டது. இரவு பெய்த பனித்துளிகளை மெல்ல மெல்ல விழுங்கிக்கொண்டிருந்தான் சூரியன். ''றேவதி'' ''றேவதி'' ''எழுந்திரும்மா..நேரமாகிறது'' என்றுகுரல் கொடுத்தாள் றேவதியின் தாய் கனகம்மா. றேவதிக்கு எரிச்சலாக வந்தது. எழும்ப மனமில்லாது எழுந்தாள். யன்னல் ஓரமாக நின்று வானத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். அந்த வானம் தெளிவில்லாமல் இருந்தது. ''ச்சே! என்ன வாழ்க்கை'' என அலுத்துக்கொண்டாள். ''என்னடி றேவதி கனவு காண்கிறாயா ? இன்றைக்கு அவர்கள் வாறார்களல்லோ நேரமாகிறது'' என்று கத்தினாள். கனகம்மா. 'ஐயோ ! என்னை நிம்மதியாய் இருக்க விடுங்கோ ! பட்ட அவமானம் போதாதா ? என கத்தவேணும் போல் இருந்தது றேவதிக்கு. ஆனால் தாயின் முகத்தைப்பார்த்ததும் கோபம் மாறி பரிதாபமாக இருந்தது. 'ஆண்டவனே ! ஏன் இப்படி எங்களை சோதிக்கிறாய் ? என மனம் அங்கலாய்த்தது. 'இப்படியும் வாழத்தான் வேணுமா' என உள் மனம் எண்ணியது. 'ஏன் எனக்கு அழகில்லையா ? அறிவில்லையா ? அந்தஸ்தில்லையா ? ஏன் இந்த சோதனை இப்படியெல்லாம் எண்ணியவளுக்கு கோபமும், விரக்தியும் ஒன்றாக சேர்ந்து அழுகையாக மாறியது. தாய் கனகமும், தகப்பன் சின்னத்தம்பி மாஸ்ரரும் படும்பாடு அவளுக்குத்தான் தெரியும். ''என்னம்மா இன்னும் ரெடியாகலையா ? என்று குரல் கொடுத்தாள் கனகம். காலைக்கடன் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு தன் அறையில் புகுந்து, தன் அலுமாரியைத் திறந்தாள். அடுக்கி வைக்கப்பட்ட சேலைகளைப். பார்த்தாள். அதனுள் இருபது சாறிகள் கிடந்தன. இருபது குடும்பங்கள் தன்னைப் பெண் பார்க்க வந்து தான் கட்டிய இருபது சாறிகளையும் பார்த்து பெருமூச்சு விட்டாள். இன்று ஒன்று கூடப்போகிறது. அந்த இருபது குடும்பங்களிடமும் ஏற்பட்ட அவமானத்தை நினைக்கும்போது உடலும், மனமும் கூசியது. எத்தனை ஏச்சுக்கள், எத்தனை பழிப்புகள் தானும், தன் குடும்பமும் படும் அவமானத்தை நினைத்து மனம் புழுங்கினாள். ''இன்றைக்கு வரும் குடும்பம், எப்படியோ '' என நினைத்துக் கொண்டு அம்மா வாங்கிவந்த அந்த நீலநிற சாறியை எடுத்து உடுத்தினாள். தன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்ற எண்ணம் சிறிதுமே இன்றி சாதாரணமாக நின்றாள். ஒவ்வொரு முறை பெண் பார்க்க வரும்போது எவ்வளவு சுமந்து நிற்பாள். ஆனால் இப்போ பெண்களுக்கு இருக்க வேண்டிய நால்வகை குணங்களும் அற்று மனம் கல்லாகி இப்போ மரக்கட்டையாக உணர்ச்சி அற்று நிற்கிறாள். அவர்கள் வர சிறிது நேரம் தான் இருந்தது. ''அம்மா றேவதி ! றெடியா'' என்று உள்ளே நுழைந்தார் சின்னத்தம்பி மாஸ்ரர். 'சரி' என்று தலையாட்டிய றேவதி ''அப்பா எல்லா உண்மையும் அவர்களிடம் கூறுவீர்கள் தானே'' என்றாள். சிரித்துக்கொண்டே தலையை ஆட்டினார் சின்னத்தம்பி மாஸ்ரர். அப்பொழுது வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது, சின்னத்தம்பி மாஸ்ரர் பரபரப்புடன் வாசலுக்கு ஓடினார். ''வாங்கோ வாங்கோ'' என்று வாய் நிறைய வரவேற்றார். கனகமும் வாசலுக்குச் சென்றாள். அவர்கள் உள்ளே வந்து அமர்ந்ததும் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ''றேவதி, காபி கொண்டு வாம்மா'' என்று குரல் கொடுத்தாள் கனகம்மா, இயக்கிவிட்ட பொம்மைபோல் வந்தாள். றேவதி எல்லாருக்கும் காபி கொடுத்த பின் தானும் அமர்ந்தாள். ''இஞ்ச பாருங்கோ, உங்களுக்கு ஒரு விஜயம் சொல்ல வேண்டும்''.

அ. அல்போன்சஸ் கமலவேணி
சில்லாலை மேற்கு
பண்டத்தரிப்பு

என்று தொண்டையைக் கனைத்தார் மாஸ்ரர். மாப்பிள்ளை வீட்டார் விழிகளை அகல விரித்தனர். சின்னத்தம்பி மாஸ்ரர் விசயத்தைக் கூறிமுடித்தார். மாப்பிள்ளை வீட்டாரின் முகம் இருண்டு போய் இருந்தது. ''எங்களை மன்னித்து விடுங்கோ. இந்த சம்பந்தம் சரிவராது'' என்று எழுந்தார் மாப்பிள்ளையின் தந்தை. ''அக்காவின் லட்சணத்தில் தங்கைக்கு ஒரு கலியாணம்'' என சீறினாள் தாய். ''உங்களின் மகளின் அழகைக்காட்டி என்னை மயக்கலாமென்று நினைத்தீர்களோ'' என்று ஒப்புக்கு பாடினான் மாப்பிள்ளை. றேவதி அழுது கொண்டே உள்ளே ஓடிவிட்டாள். கனகம் தலையைக் குனிந்தபடி நின்றாள். மாஸ்ரர் செய்வதறியாது நின்றார். மாப்பிள்ளை வீட்டுக்காரர் போய்விட்டார்கள். நெடுநேரமாக றேவதியின் விசும்பல் கேட்டது. 'அக்காவினால் என் வாழ்க்கை பாழாகிவிட்டதே ! ' என்று அக்காவின்மீது எரிச்சல், எரிச்சலாக வந்தது றேவதிக்கு.

சின்னத்தம்பி மாஸ்ரர் பணக்காரர் என்றுமல்ல, ஏழையும் என்றுமல்ல ஓரளவு வசதியானவர். அவர் சம்பளமே அவர் குடும்பத்திற்குத் தாராளமாகப் போதுமானது. அதனாலேயே படித்த தன் இரு பெண்களையும் வேலைக்கு அனுப்பவில்லை. பெண்கள் வேலை செய்வதில் விருப்பமும் இல்லை. ஆனால் அக்கா ராதிகாவிற்கோ வேலை செய்யவேண்டுமென்று ஓர் ஆசை. ''அப்பா நான் வீட்டில் சும்மாதானே இருக்கேன், வேலைக்கு போகட்டுமா?' என்று கேட்டும்விட்டாள். தன் பெண்கள் கேட்டு எதையும் மறுக்காத அவர் விருப்பமில்லாது ஒப்புக்கொண்டார். ராதிகா வேலைக்கு என்று வந்தாள். ஒரு நாள் சின்னத்தம்பி மாஸ்ரரிடம் வந்த நண்பன் ஒருவர் கதையோடு கதையாக சொன்ன செய்தியைக் கேட்டு திகைத்துப் போனார். ''டேய் சின்னத்தம்பி உன் மூத்த பொண்ணு வேலை செய்யிற இடத்தில் யாரோ பார்த்திபனாம். அவனோட கதைக்கிறாளாம்'' இதுதான் அந்த செய்தி. வேலை முடிந்து வீட்டுக்கு வந்தாள் ராதிகா. மாஸ்ரர் மிக அமைதியாக ''என்னம்மா நான் கேள்விப்பட்டவையெல்லாம் உண்மையா ? '' என தான் அறிந்ததைக் கூறினார். ராதிகா தலையைக் குனிந்தபடி நின்றாள் ''என்னம்மா.''

மீண்டும் கேட்டார் மாஸ்ரர், ''அவர் நல்லவரப்பா'' ராதிகா கூறினாள். ''என்னம்மா நீ, நாங்கள் வேதம்; அவர்கள் சைவம்'' என்றார். ''அதற்கு என்னப்பா சாதிகுறைந்தவனையா காதலிக்கிறேன்'' என்றாள் கொஞ்சம் கோபமாக. சின்னத்தம்பி மாஸ்ரர் எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தார். அவள் தன் பிடியில் இருந்து தளரவில்லை. கடைசியாக மாஸ்ரர் ''நீ இனி வேலைக்குப் போகவேண்டாம். மீறினால் கொலைதான் விழும்'' என்று கோபமாகக் கூறிவிட்டுச் சென்று விட்டார். ஒருவரும் கனவில் நினைக்காதவாறு அன்று இரவு கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டு தான் விரும்பியவனுடன் ஓடிவிட்டாள் ராதிகா. அதன் விளைவுதான் றேவதி வாழ்க்கை அற்று நிற்கிறாள்.

றேவதி ''இன்று உன்னைப் பெண்பார்க்க வருகிறார்கள்'' என்று தயங்கித்தயங்கி கூறினாள் கனகம். றேவதிக்குப் பரிதாபமாக இருந்தது. வறட்சியான புன்னகை மட்டும் செலுத்தினாள், அவர்கள் வருகிற நேரமாகிறது. எல்லோரும் ஆயத்தமாக இருந்தார்கள். அவர்களும் வந்தார்கள். வழமைபோல் எல்லாம் நடந்தது. ஆனால் மாஸ்ரர் அந்த உண்மையை மறைத்துவிட்டார். அவர்களும் போய்ப் பதில் அனுப்புவதாக சொன்னார்கள். நல்ல பதில் வரவேண்டும் எல்லோரும் பிரார்த்தித்த வண்ணம் இருந்தார்கள். ஒரு கிழமையின் பின் பதில் வந்தது. ''உங்கள் குடும்பத்தின் லட்சணமெல்லாம் கேள்விப்பட்டோம், அக்கா ஒருத்தனுடன் ஓடினாள். தங்கை எத்தனை பேருடன் ஓடினாளோ?'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது. மாஸ்ரர் குடும்பத்தினர் பழையபடி சோர்ந்து போனார்கள். றேவதி இனி எனக்கு கலியாணமே வேண்டாம் என்று கூறிவிட்டாள். மாஸ்ரர் மட்டும் கடவுளிடம் வைத்திருந்த நம்பிக்கையினால் தன் முயற்சியைக் கைவிடவில்லை. ஒரு மாதத்தின் பின் மாஸ்ரர் கனகம்மாவிடம் வந்து ''இனியாவது நல்லகாலம் பிறக்கட்டும். ஒரு நல்ல குடும்பம் பார்த்திருக்கேன். இன்றைக்கு வருகிறார்கள். ஆண்டவன் எங்களைக் கைவிடமாட்டான்.'' என்று கூறிவிட்டுச் சென்றார். அவர்கள் ஆயத்தமானார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்களும் வந்தார்கள். எல்லாம் வழமை போல் நடந்தது. ஆனால் சின்னத்தம்பி மாஸ்ரர் அந்த உண்மையை இம்முறை மறைக்கவில்லை. ஒருவாறு தயங்கித் தயங்கிக் கூறினார். ''வேறு இடத்தில் பார்ப்போம்'' என்று எழுந்தார் மாப்பிள்ளையின் தந்தை, ''எங்கட குடும்பம் கௌரவமான குடும்பம்! அக்கா ஓடினாளென்றால் தங்கை சும்மாவா இருப்பாள். என் பிள்ளைக்கு பெண்கள் வரிசையில் வந்து நிற்பார்கள்'' என்று நக்கலாககூறினாள் மாப்பிள்ளையின் தாய். ஆனால் மாப்பிள்ளை சுகத் அமைதியாக இருந்தான். ''என்ன யோசிக்கிறாய் எழும்பு'' என்று அதட்டினாள் தாய். ''அம்மா அக்காதானே ஓடினாள். தங்கை ஓடவில்லையே?'' என்றான் ''டேய் என்னடா உளறுகிறாய் எங்கட குடும்பம் கௌரவான குடும்பம்.'' என்று கத்தினாள் தாய். 'அம்மா உங்கட குடும்ப கௌரவத்தைப் பார்க்கிறீங்களே. உங்களுக்கும் ஒரு பிள்ளை இருந்து இப்படி நடந்தால் என்ன செய்வீர்கள்? அப்போ உங்க குடும்பக் கௌரவம் எங்கம்மா போகும்? இவங்களக்கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கம்மா? எவ்வளவு கஸ்ரப்படுகிறார்கள். உங்கமகளாயிருந்தா நீங்க எப்படியம்மா ஏங்குவீர்கள். என் பிள்ளைக்கு நல்வாழ்க்கை அமையவேண்டுமே என்று! நாங்கள் கிறிஸ்தவர்களம்மா'' சுகத் ஒரு பிரசங்கமே நடத்தினான். ''மாஸ்ரர் எங்களை மன்னித்து விடுங்கோ. மற்றவர்களின் மனதைப் புரியாமல் இருந்து விட்டோம், உங்களுக்கு வந்த கஸ்ரம் நாளைக்கு எங்களுக்கும் வரும் என்பதைப் புரியாமல் இருந்து விட்டோம். எங்கள் பிள்ளைக்கு விருப்பம், என்றார் எங்களுக்கும் விருப்பம்'' என்றார் சுகத்தின் தந்தை. கனகம்மாவும், மாஸ்ரரும் வானத்தில் பறந்தனர். றேவதி தான் காண்பது கனவா நனவா என்று தெரியாமல் திகைத்தாள். அவள் கண்களுக்கு அவன் தெய்வமாகவே தெரிந்தான். கடவுளுக்கு நன்றி கூறிய அவள் உள்ளம் இவன் **ஆயிரத்தில் ஒருவன்** என எண்ணியது.

## நம்பினேன்—இழந்தேன்

சொந்தங்களை நம்பினேன் – அதனால்
சொத்துக்கள் பல இழந்தேன்.
ஒரு பெண்ணை நம்பினேன் – அதனால்
என் இதயத்தை இழந்தேன்.
நண்பர்களை நம்பினேன்—
நற்பண்பிழந்தேன்—அதனால்
நட்டாற்றில் கைவிடப்பட்டேன்.
இன்று எல்லோரையும் நம்புகின்றேன்
ஏனெனில் என்னிடம்
இழப்பதற்கென்று ஒன்றுமில்லை.

பி. அ. பெர்னாண்டோ
குருமனை, பேசாலை.

## ஒரு நிமிட உறவு

இறைவா !
நான் களைப்பாயிருக்கிறேன்.
என்னால்
சிந்திக்க இயலவில்லை.
செபிக்க முடியவில்லை.
நன்மையான எதையும்
செய்யவும் முடியவில்லை.
சுழன்று வரும் சூறாவளியில்
துடுப்பு வலிக்கிறேன்.
சூழ்ந்து வரும் அலைப்பரப்பில்
சிக்கிச் சாகிறேன்.
கடலில் ஒளியேற்றி
நீரில் வழிகாட்டும் இறைவா !
வலிமைக்கும் சக்திக்கும் ஆண்டவனே !
என்னை அள்ளியணைத்து
உன் அரவணைப்பால்
அமைதிப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் தேடும் சமாதானம்...




சமாதானத்தைச் சாக்கடையில் புதைத்துவிட்டு சமாதானம், சமாதானம், எங்களுக்குச் சமாதானம் எனச் சத்தமிடும் இக்காலகட்டத்தில் சமாதானம் என்பது ஏன்? எதற்கு? யாருக்கு? என சந்தேகக் கேள்விகளுடன் வாழ்கின்ற எமக்கு சமாதானம் என்றால் என்ன என்பதை சற்று தரித்து நின்று சற்று விரிவாக சிந்திக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

சமாதானம் என்பது நீதியின்பால் அன்பின்பால் எழுதப்படவேண்டும். மக்கள் மாக்களாக வாழாமல் மக்களாக இவ்வையகம்தனிலேவாழ்ந்திட அவர்களிடையே உருவாக்கப் பட வேண்டும். உண்மையான சமாதானத்துடன் உலகில்வாழ் ஒவ்வொரு உயிரும் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். சாதி, பேதமின்றி சகல மக்களிடையேயும் உருண்டோட வேண்டும்.

சமாதானத்தின் மூலமே முழுமையான சந்திப்பு, சகோதரத்துவம், ஒற்றுமை, நேயம், ப்ரிவு போன்றவை தோன்றுகின்றன. சமாதானத்தின் மூலமே ஒவ்வொருவரும் முழுமையடைந்து அவற்றின் வழியாக உலகை உய்வடையச் செய்கிறான். மாறாக மெய்யான சமாதானமில்லையேல் உலகில் போர், பூசல்கள், பொறாமை, கொலை, அகங்காரம், களவு, பொய் போன்றவை தலைவிரித்துத் தாண்டவம் ஆடத்தொடங்கி விடும்.

இன்று ஒவ்வோர் உள்ளங்களிலும், வாயிலும் சமாதானத்தைப்பற்றியே பேச்சு, அவற்றிற்காகவே அங்கலாய்ப்பு, இவ்வேளைகளில் ஒவ்வொருவரும் இந்த உன்னத சமாதானத்தைத் தன்னுள் முதல் காண வேண்டும். ஒருவன் தன்னுள் உண்மையான, நிரந்தரமான சமாதானத்தைக் காணாமல், உணராமல், அவற்றின் கட்டுக்கோப்புக்களை அறியாமல், அவற்றின் வழி போகாமல் தன்னிலே அச்சமாதானத்திற்கு கல்லறை கட்டிவிட்டு அச்சமாதானத்தை வெளியில் தேடுவதோ அல்லது அவற்றைப்பற்றிப் பேசுவதோ வீண். இவற்றினால் எதுவித முன்னேற்றத்தையும் கொண்டு வர முடியாது, ஏனெனில் 'ஒருவன் எவ்வாறு உள்ளரங்க சீவியத்தில் இருக்கிறானோ அவ்வாறே அவன் வெளியரங்க சீவியத்திலும் வாழ்வான்' என்பது பல அறிஞர்களின் வாயிலாக நாம் கேட்ட உண்மை. ஒருவன் தன்னில் சமாதானமாக வாழ்வதன் மூலம் தனது வீட்டையும், சமுதாயத்தையும், நாட்டையும், உலகத்தையும் ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற்றமடையச் செய்கிறான், இங்குதான் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளி ஆகிறோம்.

இவற்றிற்கு எதிராகச் சமாதானத்தைப்பற்றிப் பேசிக் கொண்டு சமாதானத்தைச் சவக்குழியில் புதைத்து அதன் மேல் கல்லறையும் கட்டிக்கொண்டு தன் சுயநலத்திற்காக எங்களுக்குச் சமாதானம் என வாழும் சதிகாரக்கூட்டம் ஒருபுறம். எனவேதான் சமாதானம் அரசியல் பீடங்களிலும், ஆண்டன் சந்நிதியிலும் வெறும் சலங்கை ஒலிகளாக, ஒலிக்கின்ற இந்நிலை மாற வேண்டும். நாம் தேடும் சமாதானம் ஒரு தூய, உண்மையான சமாதானமாக அமைய வேண்டும். எனவே சமாதானம் எமது வாழ்க்கையில் சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் மிளிர வேண்டும். எதிர்கால வாழ்விற்கு வளமானதாக அமைய வேண்டும்,

எனவே வரும் நாட்களில் வளரும் வாழ்க்கை வசந்தமாக நாம் தேடும் சமாதானம் இனிவரும் நாட்களிலாவது கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போமாக!

வெ. யூஜின், மூதூர்.
திருகோணமலை.

### சிரி-சிந்தி

(ஞாயிறு திருப்பலி முடிவடைந்ததும், வெளியில் மக்கள் நிற்கும்வேளை 1—வது பக்திமான் 2—வது பக்திமானைப் பார்த்துக் கேட்கின்றார்.)

**1—வது பக்திமான்:—** பூசை நடந்து கொண்டிருக்கும் போது பக்கத்தில் இருந்தவருடன் என்ன கதைத்துக் கொண்டிருந்தனீர்?

**2—வது பக்திமான்:—** நீர் ஒரு பக்திமான், சரியான பக்தியுடன் பூசை கண்டிருந்தால் எப்படி நான் கதைத்தது உமக்குத் தெரிந்தது?

**1—வது பக்திமான்:—** நான் பக்தியாய்த் தான் பூசை கண்டேன். ஆனால் நான் சாமாதான முத்தம் கொடுக்கும் வேளை திரும்பியபோது தான் நீர் கதைத்ததைக் கண்டேன்.

குருகுமுத்து—தவம்

## இளைஞனே! உன் ஆற்றல் எப்படிப்படடது?

இளைஞனே! நீ சென்று கொண்டிருக்கிறாய். சற்று நின்று உன் பாதையைத் திரும்பிப்பார் ......... ...

மானிடவாழ்க்கை ''காலையில் பூத்து மாலையில் வாடும் வயல்வெளி மலரைப் போன்றது.'' அதற்குள் உனக்கு எத்தனை ஆசைகள், எத்தனை உணர்வுகள், கற்பனைகள், ஏக்கங்கள். இளைஞன் என்று சொல்லும் போது அவன் எல்லாவற்றையுமே அநுபவித்து விட வேண்டுமென்ற ஆவல் உடையவன். இந்த இளமைப் பராயத்தல் அதிக அறிவுள்ளவன். அதிக சக்தி உள்ளவன். நினைத்ததை சாதிக்கும் வல்லமையும் உடையவன்.

இவ்வளவு திறமையுள்ள நீ உன் ஆற்றல்களை எதற்குப் பயன்படுத்துகிறாய்? ஆக்கத்திற்கா? அழிவிற்கா? இன்று எங்கு பார்த்தாலும் முழுவதும் என்று சொல்லாவிட்டாலும் பெரும் பான்மையானோர் தங்கள் சக்தியை அழிவிற்கேபயன் படுத்துகின்றனர். அழிவிற்குப் பயன்படுத்தும் போது கூட் சக்திவாய்ந்ததாகக் காணப் படும் உனது ஆற்றல்கள், நன்மையான காரியங்களுக்கு பயன்படும்போது எவ்வளவு சக்திவாய்ந்ததாகக் காணப்படும் என்று நீ சிந்தித்ததுண்டா? நீ இளைஞனாக இருக்கும்போது உன் ஆற்றல்களை, திறமைகளை, மழுங்கடிக்கிறாய், அழிக்கிறாய். ஆனால் உனக்குள் இருக்கும் திறமையை நீ பண்படுத்தி, உரமிட்டுக் கனி தருகின்ற மரங்களாக அந்தக் கனியை மற்றவர்களும் சுவைப்பதற்கு அந்த மரங்களை வளர்க்க நினைத்ததுண்டா? நினைத்து செயற்படுத்திப்பார். உனக்குள் எத்தனை ஆற்றல்கள் வெளிப்படுகின்றன என்று நீயே உணர்ந்து கொள்வாய்.

இளைஞனே! வானத்திற்கு கீழ்நடக்கும் எல்லாக்காரியங்களுமே மாயையானது, அதற்குள், பணம், பதவி பகட்டான வாழ்வு. போன்றவற்றை நாடி ஓடுகின்றாயே. இது எத்தனை காலத்திற்கு உனக்கு அமைதியைத் தரப்போகின்றது? இந்தப் பணம், பதவி, பகட்டான வாழ்வு முதலியவைகள் நிலையில்லாதது, அழியக்கூடியது. நீ இதை நோக்கி ஓடுவதிலும் பார்க்க இயேசுவை நோக்கி ஓடு. அவர் உனக்கு நிலையான வாழ்வை அழியாத வாழ்வை யாருக்குமே கிடைக்கமுடியாத அழியாத இன்பத்தை தருவார்.

இளைஞனே! நீ இறைவனின் குரலிற்கு செவி கொடுக்கின்றாயா? நீ கேட்கக் கூடும் இறைவன் என்னை எங்கே கூப்பிடுகிறார். நான் அவரின் குரலிற்கு செவி கொடுக்க என்று, அப்படி எண்ணாதே! ஏழைகளின் வடிவில், துன்புறுவோர் வடிவில், அகதிகள், அநாதைகள், விதவைகள் வடிவில் உன்னைக் கூப்பிடுகின்றார். நீ அவர்களுக்கு செவி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



### உங்கள் கனவுகளை நனவாக்குங்கள்
### 8. பாற்பாகுபாடும் பாலுறவும்

எமது பாரம்பரியப் பண்பாட்டின்படி ''பால்'' என்பது வெளிப்படையாக எடுத்துப் பேசக்கூடிய விடயமல்ல. அது பற்றி பிள்ளைகள் வினாக்களையும் ஐயப்பாடுகளையும் எழுப்பும்போது அவற்றை வேண்டாத வினாக்கள் என்றோ, ஒவ்வாதவை என்றோ, அசிங்கமானவை என்றோ ஒதுக்கி விடை கூறாமலே தட்டிக்கழித்து விடுகின்றோம். இத்தகைய மனப்பான்மையால் ''பால் சம்பந்தமான அறியாமையும் அது பற்றிய தவறான கருத்தும் உருவாகிவிட ஏதுவாகும். மனிதனது யதார்த்த பூர்வமான மற்றைய விடயங்கள் போலவே ''பால்'' பற்றியதும் என்பதை பயமோ, கவலையோ இன்றி, மிகைப்படுத்தாமல் அதற்குரிய இடம் அளிக்கப்படுதல் வேண்டும்.

ஆண், பெண் என்ற பாலமைப்பு திருமணத்திலே இருவித கடமைகளை நிறைவு செய்கின்றது. தனிமனிதனுடைய நிலையிலிருந்து நோக்கும்போது கணவன் மனைவிக்கிடையிலான காதலை— அன்பை மிக நெருக்கமான முறையில் உடலால் உணர்த்தும் அந்நியோன்னியமான செயற்பாட்டின் வெளிப்பாடு தான் பாலுறவு. பாலுறவு— உடலுறவு என்பது பரஸ்பரம் ஒருவர் ஒருவருக்கு தம்மை முற்றாகக் கையளித்தலை நிறைவேற்றுகின்ற செயல் என்றும், ஆழமான இன்பத்தின் நிகழ்வுநிலை என்றுந்தான் பொருள்படும். மிதமிஞ்சிப் பாலுறவு இன்பத்தை நுகர்வதற்காக உண்மையான அன்பின்றி உடலுறவு கொள்வது மிருகச் செயலாகவே இருக்கும். உடற்கூற்று அடிப்படையில் நோக்கினால் தாம்பத்திய உறவு சந்தான விருத்திக்கு வழிகோலும். இது பாலுறவின் மற்றொரு அம்சமான இனவிருத்தித் தொழிற்பாடாகும். (இனவிருத்திக்கு உதவும் மற்றொரு கடமையை தாம்பத்திய உறவு நிறைவேற்றுகின்றது, என்று கொள்க)

மேற்சொன்ன இரு கடமைகளையும், பூரணமாக நிறைவேற்றும் பொழுது தாம்பத்திய உறவில் கணவன் மனைவியினால் பரிமாறிக்கொள்ளப்பட்ட அன்பின் கனியாக குழந்தை விளங்குகின்றது. ஒரு குழந்தையின் சொந்த முன்னேற்றம்— அபிவிருத்திக்காக அதனது பெற்றோர் ஒருவர், ஒருவர் மேல் கொண்ட அன்பின் விளைவாக கருவாகி உருவாகி பிறப்பதும் அக்குழந்தைக்கு அவசியமாகின்றது.

#### உடற்கூற்று அறிவு

திருமணமாகப்போகும் ஆணும், பெண்ணும் ஆண் பெண் பாலுறுப்புகளின் அமைப்பு, உடலுறவின் போது அவை இயங்கும் முறை, மாதவிலக்கு, கருத்தரித்தல், கருவளர்தல், மகப்பேறு (பிரவசம்) என்பன பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். இந்த அறிவை எல்லோருமே தகுந்த முறையில் பெறுகின்றனர் என்று சொல்லிவிட முடியாது. திருமண ஆயத்தப்பயிற்சி முகாங்களுக்கு வருபவர்களில் சிலர் பாலுறுப்புகள், உடலுறவு என்பன பற்றித் தெரிந்துகொண்டிருந்த தகவல்கள் போதுமானவையாய் இல்லை என்பதும், தவறானவை என்பதும் திருமண ஆயத்த பாசறை நிலையத்தினரின் அனுபவங்களிலிருந்து தெரியவந்துள்ளது. வீட்டிலும், பாடசாலையிலும் தரப்படும் பாலியல் சம்பந்தமான அறிவு நமது நாட்டில் நல்ல பலனைக் கொடுக்கவில்லை என்று கூறலாம். இது பற்றிய சரியான, முழுமையான தகவல்களை இது சம்பந்த நூல்கள் எல்லாமே தரக்கூடுமோ என்று நம்புவதற்கில்லை. ஆகவே பாலியல், உடலுறவு பற்றிய நிறைவான தகவல்களையும். விளக்கங்களையும் தரக்கூடியது என்று நன்கு சிபாரிசு செய்யப்பட்ட நூல்களைப் படிப்பதனால் இது பற்றி ஓரளவு அறிவைப் பெறமுடியும். எல்லாவற்றுக்கும் மேலாக குடும்ப வாழ்க்கை பற்றிய விரிவுரைகள், பயிற்சி முகாங்களில் பங்குபற்றுவதனாலும், திருமண ஆலோசகரின் அறிவுரைகளையும், விளக்கங்கள் வழிகாட்டுதல்களைப் பெறுவதனாலும் அல்லது தகுதியான ஒரு வைத்தியரின் ஆலோசனைகளைப் பெறுவதனாலும் தகுந்த முறையில் இந்த அறிவைப் பெற முடியும். இதுவே நற்பயனைத்தரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




22 கடைசிக் கலாபனை (2) (தொடர்ச்சி)

கலேரியும் மாக்சிமியனும்
அடிமேல் அடிபோட
அம்மி நகரத் தொடங்கியது.
தியோக்கிளேசியன் படிப்படியாக
கிறிஸ்தவருக்கு எதிரியாகத் தொடங்கினான்.
தியோக்கிளேசியனின் தலைநகர்
நிக்கமேடியாவில் அரண்மனை தீப்பற்ற
அப்பழி கிறிஸ்தவா மேல் போடப்பட்டது.
ஏறத்தாழ அதே காலத்தில்
ஆர்மேனியாவிலும் சீரியாவிலும்,
அரசனுக்கெதிராகக் கிளர்ச்சி நடந்தது.
அப்பழியும் கிறிஸ்தவர் மேல் போடப்பட்டது.
கி. பி. 303 இல் மூன்றும்
கி. பி. 304 இல் ஒன்றுமாக
மொத்தம் நான்கு கட்டளைகளை அரசன் பிறப்பித்தான்.
முதல் கட்டளையால்
உரிமைகளைப் பறிக்கவும்
ஆலயங்களைத் தகர்க்கவும் உரிமையளித்த அவன்
இரண்டாவது கட்டளையால்
குருக்களையும் ஆயர்களையும், கைதுசெய்ய
அனுமதியளித்தான்.

மூன்றாவது கட்டளையால்
அவர்களைச் சித்திரவதை செய்ய அதிகாரமளித்து
நான்காவது கட்டளையால்
கிறிஸ்தவர்கள் அனைவரும்
கிறிஸ்துவை மறுதலித்தே ஆகவேண்டுமென்று
உத்தரவு பிறப்பித்தான்.
உரோமையெங்கும்
இரத்த ஆறு பெருக்கெடுத்தது.
ஆயிரமாயிரமாய்
இரத்தம் சிந்திய வேதசாட்சிகளுள்
புனித ஜோர்ஜ்,
புனித டொறத்தி,
புனித அக்னேஸ்,
போன்றவர்கள் சிலரை
பானைச் சோற்றுக்குப் பதச் சோறுகளாக நோக்கலாம்.
புனித ஜோர்ஜ் ஒரு இராணுவத் தலைவர்.
தியோக்கிளேசியனின் தனிப்பட்ட கனியைப் பெற்றவர்.
கலாபனைகள் ஆரம்பித்ததும்
சிங்கத்தின் குகைக்கே சென்று
நீதி கேட்கத் துணிந்தார்.
அரசின் ஒரு பகுதி மக்களை
அநாதைகளைப் போல் கொன்று குவிப்பது அநீதி என்று
அரசனிடமே எடுத்துச் சொன்னார்.
பன்றிகள் முன் முத்தெறிந்து பயனென்ன
சித்திரவதைக்கும், கொலைக்கும் கையளிக்கப்பட்டார்.
புனித டொறத்தி
இவள் வேதசாட்சிப் பெற்றோரின் பெண்.
ஆளுநன் அவளை அச்சுறுத்தினான்.
பின்பு ஆசைவார்த்தை கூறிப்பார்த்தான்.
அவள் மசியவில்லை.
கிறிஸ்துவை மறுதலிக்கவில்லை.
கிறிஸ்துவை மறுதலித்த இரு பெண்களின் பொறுப்பில்
அவன் அவளை ஒப்படைத்தான்.
பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலம் தின்னும்
என்பது அவன் எண்ணம்.
ஆனால் இங்கோ, நிலை
பூவோடு சேர்ந்த நாரின் கதையானது.
அவர்கள் தமது முன்னைய பலவீனத்துக்காக மனம்வருந்தி
விசுவாசத்தை மீண்டும் ஏற்றனர்.
கோபமுற்ற ஆளுநன்
பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தி
தலையை வெட்டிக் கொலை செய்வித்தான்.
புனித அக்னேஸ்
பதின்மூன்றே வயது நிரம்பியவள்.
அவளைக் களங்கப்படுத்தி
கடவுளை மறுக்க வைக்க எண்ணினான் ஆளுநன்.
ஆனால்
கடவுளின் கரம் அவளைக் காத்தது.
அவளை அணுகியவன் குருடாகிப் போனான்.
பின்பு வாளால் குத்துண்டு இறந்தாள்.

சந்திரன்.

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்

வாசக நேயர்களே!

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலமாக திருநூலின் ''பழமொழி ஆகமத்'' திற்கு ஏற்ப நம் முன்னோர் கூறிவருகின்ற புதுமொழிகளையும் இன்றைய கவிஞர்களின் எடுத்துக் காட்டுகளையும் தொடர்ந்து உங்களோடு பகிர்ந்து வருகின்றேன் அல்லவா? இது வாசகர்களின் உள்ளத்தை — வியாக்கியானங்களைத் திறந்த மனத்தோடு கண்டிக்கவோ — அன்றேல் பாராட்டவோ — அல்லது ''நடையை மாற்று'' என்று எம்மை நீங்கள் திருத்த முன் வராதது ''காவலன்'' வாசகர்கள் மட்டில் உள்ள ஒரு பெருங்குறை என்பதனை நான் இங்கே குறிப்பிடவிரும்புகின்றேன்,

''கண்கண்ட தெய்வங்கள்'' என்பதற்கு நம் முன்னோர் நால்வரை வரிசைப் படுத்துகின்றார்கள். 1 மாதா 2 பிதா 3 குரு 4 தெய்வம்! அதாவது மாதா வழிநட! பிதாவின் உழைப்பில் வாழ்! குருவின் சொற்படி கேள்! மூவரையும் ஏற்றிப் போற்றினால் அங்கே நாலாவது ஆளாம் தெய்வத்தைக் கண்டடைவாய்! என்றார்கள் ஆன்றோர்கள். .

இத்தகு நன்மொழிக் கேற்ப வாழ்கின்றவர்கள் நம்மில் எத்தனை பேர்?

நம் திரு நூல் ''ஆசிரியர்'' தன் தந்தையையும், தாயையும் சபிக்கிறவனுடையவிளக்கு இருளில் அவிக்கப்படும் என்று 20/20 ல் கூறுகின்ற இறை வார்த்தையை ஏற்று நின்ற நம் புதுமொழியாளர் என்ன சொல்லுகின்றார் தெரியுமா?

''தாய் வார்த்தை கேளாதன் — நாய் வாய்ச்சேலை''! எப்படி இருக்கிறது பொருத்தம்.

இதற்குப் பொருத்தமாக நமது இன்றைய கவிஞன் கூறுகின்ற வார்த்தைகள் இப்படி...!

''தாயில் சிறந்த கோவிலும்
இல்லை —
தந்தை சொல் மிக்க மந்திர
மில்லை''

குடும்பத்தில், பெற்றோர்களையே, கோவிலாக மதித்துப் போற்றுகின்ற கவிஞன்:— தாயைக் கோவிலாக மதித்து தந்தையைக்கோவிலின் அனுட்டானங்களைக் கவனிக்கும் ''அர்ச்சனாகப்'' போற்றிப் புகழும் கவிஞனைப்பாராட்டாமல் இருக்க முடியுமா?

''தந்தை தாய் பேண்'' என்ற முதுமொழியுடன் ஒப்பிட்டு நோக்குங்களேன்.

மீண்டும் உங்கள் எண்ணப்படி தொடர்வேன்.

**வாரம் ஒரு சிந்தனை:**

**''மூத்தோர்கள் கட்டளையை —**
**[illegible]''**

அன்புடன்
எஸ். ஏ. நாதர்




| ஒளி: 4 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 16 | எம் வாழ்வின் வழி யேசு |

**விழி வழி:**

### நட்பு

ஒத்த வயதினரோடு பழகும் பாசம், அது நட்பு ஆகிறது. இந்தப்பாசம், அன்பு என்பது வளரும் பிறையாக நாளும் வளரும். வாழ்கின்ற இடத்தின் தொடர்பால் நட்பு ஏற்படும். சேர்ந்து பழகும் காரணத்தால் நட்பு ஏற்படும். உணர்ச்சி ஒத்த நட்பே சிறப்பானது.

வெளிப்பகட்டால், வேடம் போட்ட நடிப்பால் நட்பு ஏற்படாது. அன்பினால் நெஞ்சம் மலரப் பழகுவதே நட்பு ஆகும். சிரித்து மகிழ, ஊர்சுற்றிவர, கூடிப்பழகுவது மட்டும் நட்பு என இன்று பலர் நினைக்கின்றனர். அதுவல்ல உண்மையான நட்பு.

அன்புக் கண்மணிகாள் !

தவறு செய்த போது கண்டித்துத் தவறைச் சுட்டிக்காட்டி, நல்வழிப்படுத்தலே உண்மையான நட்பாகும்.

துன்பம் வரும்போது, உடை விலகக் கை விரைந்து தடுப்பதுபோல் விரைந்து உதவி செய்வதே நட்பாகும்.

நற்பண்புகள் நிறைந்த நல்ல நண்பர்களை, நண்பிகளைப் பெற்று நலமுடன் வாழ குழந்தை யேசுவை வேண்டும்.

**அன்பின்**
**அன்பு விழி**

### திருக்குறள் கற்போம்

★ முகம் நக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.

★ நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதி காண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

★ உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

★ ★ ★

### அங்கத்துவம்

A 41. சுகந்தி அருளானந்தம், நவாலி.
A 42. ஏ. சர்மிலி, நெடுந்தீவு.
A 43. கெபிரியல் ஜோண்சன், லுணுகலை.

★ ★ ★

### மதிய உணவு இடைவேளை

உங்களுக்குத் தரப்பட்ட, இப்பொன்னான நேரத்தை எப்படிச் செலவு செய்கிறீர்கள் ?

இவ்வினாவுக்கான விடையை எழுதி அனுப்புங்கள்.

பிரசுரமாகும் விடைக்கு அன்பளிப்பு உண்டு. விரைந்து அனுப்புங்கள்.

### ஞானமும் மடமையும்

கற்றவன் தன் அறிவைப் பாராட்டாமல்
மறைக்கின்றான். மதியீனரின் இதயமோ
அறிவீனத்தை வெளிக்காட்டுகின்றது.
தன் நண்பனைப்பற்றி நட்டத்தைக்
கவனியாதவன் நீதிமானாய் இருக்கிறான்.
தீயவரின் பாதையோ அவர்களையே
வஞ்சிக்கும்.
மதிகெட்டவன் தன் கோபத்தை உடனே
காட்டுகிறான். பொல்லாப்பைப் பொருட்—
படுத்தாதவன் ஞானியாம்.
மனிதன் தன் போதகத்தால் அறியப்படுவான்.
வீணாகவும் மூடனாகவும்
இருக்கிறவனோ அவமானத்திற்கு
உட்படுவான்.

M. நிலானி வின்சன்சிலோஸ்
அங். எண். B/18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் சிந்தனைக்கு

★ நீ பிறந்த நாள் தொட்டு திருச்சபையின் பெயரால் உனக்குப் பணிபுரிகின்றாரே ஒரு குரு—அவர் பணிக்காக என்றாவது 'நன்றி' கூறினாயா?

★ அவரின் புதிய நல்ல முயற்சிகளை எப்போதாவது பாராட்டி, அவற்றைச் செயல்படுத்த துணை புரிய முன் வந்தாயா?

★ உறவு இன்றி வாழ்வில்லை. அன்பு இன்றி நிறைவு இல்லை. சுயநலமின்றி அவரோடு உறவை வளர்க்க முயற்சித்தாயா?

★ அவர் காட்டும் நல்வழியில் பின்செல்லத் தயங்கியது மட்டுமல்ல, அவர் உன் விருப்பத்தின் படி மட்டுமே நடக்கவேண்டுமென நீ எதிர்பார்க்கவில்லையா?

★ அவரில் இருக்கும் நன்மைத் தனங்களையும் சிந்தித்து அவரை என்றேனும் மெச்சியிருக்கிறாயா?

★ குருவும் பிழைவிடலாம், அவர் ஒரு மனிதன். நீ பிழை விடுவதில்லையா? அப்படியிருக்க பன்னாடையைப்போல் அவரின் பிழைகளை மட்டும் தேடித்திரிந்து, அவற்றைப் பரப்புவதில் நீ இன்பம் காணவில்லையா!

★ ஒவ்வொரு குருவும் கடவுளால் உனக்குத் தரப்பட்ட தந்தை, சகோதரன், நண்பன், வழிகாட்டி இதை நீ ஆழ்ந்துணர்ந்து அவர்களை ஏற்றுக்கொள்கிறாயா?

**உன்னையே நீ அறிந்து இறைவன் முன்னிலையில் உன்னை உள்ளபடி ஏற்று மனம்மாற முன்வா, அது புதுவாழ்வுக்கு இட்டுச்செல்லும்.**

(பாதுகாவலன் 1979 மீள்பிரசுரம்)

## புனித பிரான்சீஸ்கன் சகோதர சபை உன்னையும் அழைக்கிறது.

இயேசுவின் நற்செய்தியினை எமது மண்ணிலே முதன் முதலாக வித்திட்ட புனித பிரான்சீஸ்கன் மறைபரப்புச் சகோதர சபையில் இணைந்து பணியாற்ற விரும்புகிறீரா?

சேவைத்தளத்தில் பல பணிகள் காத்திருக்கிறது. அகதிகள், அனாதைகள், ஒதுக்கப்பட்டோர், நோயாளர், வறியவர் மத்தியில் நாம் அறிவூட்டவும், தொழிற்பயிற்சிகள் ஏற்படுத்தவும், மருத்துவ பணிகள் ஆற்றவும், ஆன்மீக வழிகாட்டவும், அன்புறவில் புதிய சமூகத்தை உருவாக்கும் வழிகாட்டிகளை உருவாக்கவும் புனித பிரான்சீஸ்கன் சகோதரர் சபையில் சேர்ந்து இறைபணியில் அன்பு, அறிவு, பண்பு, பாசம், பக்தியினையூட்டும் இறைவாக்கினராக உங்கள் வாழ்வை இச்சபை மூலம் ஆற்ற, இணைந்து செயல்படத் தொடர்பு கொள்ளுங்கள்.

இவ் ஆண்டுக்கான புதியவர்கள் தேர்வு இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

தகமைகள்:—

நிறைவான பக்தி, புத்தி, சக்தியுடன்
குறைந்தது 8 ஆம் வகுப்பு தேர்வும்,
பெற்றோர் அனுமதியும்,
பங்குத்தந்தையின் சிபார்சுடனும்,
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குனர்
புனித பிரான்சீஸ்கன் சபை
116, விகாரை வீதி'
மாத்தளை.

அசீசி இல்லம்
குருக்கள் மடம்
மட்டக்களப்பு

**ANNUAL RESIDENTIAL STUDY PROGRAM**
*Conducted By*
**The Oblate Theological Updating Institute**

**Theme :** Between Memory and Hope: The Church in 1990

**Course Description :** A week-long reflection (guided by competent personnel) on where and how the Church of apostles, martyrs and Saints finds vision, strength and hope for her mission today and tomorrow.

**Dates :** 16th - 24th July, 1990

**Venue :** OMI Communication centre, Polwatta, Minuwangoda

**Participants :** Open to laity, religious and clergy; There is accomodation only for 45 participants. First come first served; Hence apply early. Those who followed our program in 1987&1988 need not apply.

*For further information write to:*
**The Director of Ongoing Formation,**
**Oblate Scholasticate,**
**Ampitiya.**

## 1ஆம் ஆண்டு நினைவு



திருமதி
**அமிர்தநாதர் றோசம்மா**

மலர்வு: 24-08-1927 உதிர்வு: 29-05-1989

''என்னை விசுவசிப்பவன் இறப்பினும் வாழ்வான்''

பாசத்தோடு எம்மை வளர்த்து அன்பெனும் தீபத்தை எங்கள் இதயங்களில் ஏற்றி வைத்தாய் நீ.

ஆண்டவன் பாதம் சென்று ஆண்டு ஒன்று மறைந்தாலும் — எம் அகங்களில் இருந்து இனிய உம் நினைவுகளோ அகலாதம்மா.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மண்டைதீவு புனித இராயப்பர் ஆலயத்தில் 29-05-90 திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

4ஆம் வட்டாரம்
மண்டைதீவு

## விண்ணுலக வாழ்வின் 40ஆம் நினைவு நாள் அஞ்சலி



**மனவற்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை**

அன்னை மடியில்: 1919-1-14 ஆண்டவன் அடியில் 199.-04-10

கர்த்தாவே!

எம்மிடம் இருந்து உமது சந்நிதிக்கு அழைத்துக் கொள்ளத் திருவுளமான உமது அடியாள் மனவற்பிள்ளை அந்தோனிப்பிள்ளையை கருணையுடன் நோக்கியருளும். இவரது ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். முடிவில்லாத பிரகாசம் இவருக்கு பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக!

இவரின் பிரிவால் துயருறும்:
**அன்பு மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கரம்பன் கிழக்கு. A/110

## கலைநிலா...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலும் கிறிஸ்தவகூத்துக்களில் நவீனத்துவம் என்று சொல்லி எவரும் மரபைக் குழப்பக் கூடாது என்று முன்னுரையிலும் கூறுமிவர் கிறிஸ்தவ தென்மோடி மரபிலில்லாத காத்தான் கூத்து மெட்டையும் எந்த நாட்டுக்கூத்து மரபிலுமேயில்லாத சின்னமணி வில்லுப்பாட்டு மெட்டையும் புகுத்தியிருப்பது நாட்டுக்கூத்திற்கு சுவையூட்ட என்றால் அது தென்னிந்திய திரைப் படங்களில் மேற்கொள்ளப் படும் ஜனரஞ்சக முயற்சிக்கு எவ்விதத்திலும் வேறுபட்டதல்ல.

★ இந்நாடகம் படிப்பதற்கு உகந்தது. ஆனால் மேடையேற்றும்போது நெறியாளருக்குப் பல சிக்கல்களைக் கொடுக்கும். ஏனெனில் நாடகத்தில் உச்சக்கட்டம் (சங்கிலியன் மகனைவெட்டல்) 14 ஆம் அங்கத்தில் வந்துவிட நாடகம் 18 ஆம் அங்கத்திலேயே முடிகிறது. மேடையில் முடிவு சப்பென்றிருக்கும்.

★ ஆசிரியர் எஸ். நாகராசா அவர்கள் 'வித்துக்கள்' என்ற தலைப்புப்பற்றி ஒரு வினாவெழுப்பினார். கவிஞர் தமது பதிலுரையில் அப்பெயரைத் தான் வைக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால் ஆசிரியரின் அவ்வினா உள்ளடக்கத்திலுள்ள ஒரு பெரும் குறையைச் சுட்டிக்காட்டுகிறதென்றே நான் நினைக்கிறேன். கதை புனித பிரான்சிஸ் சவேரியாருடைய வாழ்க்கை வரலாறு அல்லது இலங்கையில் வேதசாட்சிகளின் வரலாறு என்பதில் பெரும் மயக்கம் இருக்கிறது.

★ ஈற்றில் கலாநிதி இ. பாலச்சந்திரன் கருத்துப் பற்றி ஒரு குறிப்பு மதங்களுக்கிடையில் கடந்த காலத்தில் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களை நாம் மறந்துவிடவேண்டும். அவற்றைக் கலைகளில் நினைவு கூரக் கூடாது என்று ஆணித்தரமாகக் கூறிய அவரால் எவ்வாறு வித்துக்களின் உள்ளடக்கத்துடன் இணக்கம் கண்டு கவிஞரைப் பாராட்ட முடிந்தது?

**மதி—**

## இளைஞனே! ......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடுத்ததுண்டா? செவிமடுத்திருந்தால் நீ யேசுவிற்கே செவிமடுத்தாய். செவிமடுக்காது விட்டிருந்தால் இனியாவது செவிமடுக்க முயற்சிசெய்.

ஆகவே இளைஞனே! நீ இதுவரையில் உன்னைப்பற்றி, உன் திறமைகள், ஆற்றல்களைப்பற்றி சிந்திக்காது விட்டிருந்தால் இன்றேசிந்தி, அதையும் நன்றே சிந்தி. அந்த உன் வாழ்க்கையில் செயற்படுத்து. உன்வாழ்வு ஆசீர்வாதங்களால் பொங்கி வழியும் இதை நீயே உணர்ந்து கொள்வாய்.

''வாலிபநாட்களில் என் கர்த்தரை நினைத்தேன், ஏற்றிய தீபத்தால். **என்னுள்ளமே மகிழ்ந்தது யேசுவின் அ·:பால்,**

**காணிக்கை மேரி ஜெனிவி**
மன்னார்

## அமதிகள் மாநாடு ...


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகத்தானே பணிபுரிகிறார்கள்? இக்கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொழுது அ. ம. தி. கள் பங்குத்தளங்கள் என்று சிந்தியாது, சிறப்புப் பணிகள் (Specialized ministries) என்று சிந்திக்க முயலவேண்டும். சிறப்புப் பணிகள் என்று நாம் சிந்திப்பதனால், இன்று ஈழ நாட்டுத் தமிழ் மக்களின் தேவைகள் எவை? வடகிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் தேவைகள் எவை? முதலில் இத்தேவைகள் சமூகவியல் ரீதியாக ஆராயப்பட்டு, அடையாளங்காட்டப்பட வேண்டும். மக்கள் தேவைகள் நோக்கியே பணிகள் அமைய வேண்டுமேயொழிய, அ. ம. தி. கள் தேவை நோக்கி அன்று. இத்தேவைகளை ஆராய்ந்து அறிந்து அவற்றை சந்திக்க எப்படிப்பட்ட பணிகளை 90 களுக்கு அ. ம. தி. கள் உருவாக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்ல ஒரு சிறுகுழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் இப்பகுதிக்கும் எழுதுவார்கள்,

(வளரும்)

**கரவையூர்ச் செல்வம்.**

## 1ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



**சந்தியா யேமிஸ்**
**(லோப்ஜயா)**

மலர்வு: 08-12-1916 உதிர்வு: 23-5-1989

ஆண்டொன்று கடந்திடினும்
உம் அன்புருவம் எமைவிட்டு,
நீங்காது என்றென்றும்,
அன்பு, பண்புக்கோர் உறை
விடமாய் இன்முகத்துடன்
பழகி வந்தீர் அனைவரோடும்
இனி எப்போ காண்போம்,
உம் அன்பு முகம்.

இனிதாக உமதான்மா இறைவனிடம் இளைப்பாற இறைஞ்கிறோம் இறைவனிடம்.

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கொழும்புத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# மன்னாரில் மறைவாழ்வுக் கல்விப் பணியாளர் கூட்டம்

மன்னார் மறைவட்ட மறைவாழ்வுக் கல்விப் பணியாளரின் பாதுகாவலர் தினம் பங்குனி 17 ஆம், 18 ஆம் திகதிகளில் மறையகத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. மறைவட்ட பங்குகள் பதினெட்டிலுமிருந்து 90க்கு மேற்பட்ட மறையாசிரியர்கள் வருகை தந்திருந்தனர். 17 ஆம் திகதி மாலை எல்லோரும் ஒன்று கூடினர்.

குருமுதல்வர் அருட்திரு. சேவியர் குரூஸ் அடிகளாலும், இயக்குனர் அருள்திரு. தி. நவரெட்ணம் அடிகளாலும் திருநாட் திருப்பலி சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மறையாசிரியர் தங்கள் பங்குகளோடு இணைந்து பாதுகாவலருக்கு அர்ப்பணித்தது முக்கிய நிகழ்ச்சி. இயக்குனர் ''மறைவாழ்வுக் கல்வியும், மறையாசிரியர்களும்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். ஒரு வருட அறிக்கையைச் சமர்ப்பித்த விடத்தல்தீவு, சிலாவத்துறைப் பங்குகள் சபையினரால் பாராட்டப் பெற்றனர். ஒவ்வொரு பங்கும் ஒருவருட அறிக்கை தயாரிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

''மன்னா'' இதழ் இனி வருடத்திற்கு மூன்று தடவைகள் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்படும் என்றும் கூறப்பட்டது. வருகை தந்திருந்த அனைவருக்கும், சிறுவர் வேதாகமம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தகவல்: **திருமதி: றெஜீஸ்.**
செயலர்
ம. வா. க. ப. சங்கம்.

## தேசிய வானொலியில் மத ஒலிபரப்பு

ஹங்கேரி நாட்டு தேசிய வானொலி திருச்சபை பற்றிய நிகழ்ச்சிகளுக்குத் தனியிடம் ஒதுக்கியுள்ளது. கடந்த மே 7—ம் நாள் முதன் முறையாக மத சம்பந்தமான ஒலிபரப்பு ஹங்கேரி தேசிய வானொலியில் இடம்பெற்றது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகலில் 10 நிமிடக் கத்தோலிக்க செய்திகளும் ஒவ்வொரு ஞாயிறும் 5 நிமிடம் சிறுவர்களுக்கான மறைக்கல்வியும், ஒவ்வொரு ஞாயிறும் விவிலியத்தில் ஒரு பகுதிக்கு விளக்கமும் ஹங்கேரி தேசிய வானொலியில் ஒலிபரப்பப்படும் என செய்திகள் கூறுகின்றன.

# செட்டிகுளப்பங்கில் குழந்தையேசு ஆலயம்

செட்டிகுளப் பங்கில் சலசலத்துக் கொண்டோடிக் கொண்டிருக்கும் அருவி ஆற்றினால் சூழப்பட்டு கற்கள் கற்பாறைகளாக வளர்ந்து அழகாகக் காட்சி தருகின்ற கல்லாற்றுப் பகுதியிலே, கோயில் கொண்டெழுந்தருளிய குழந்தை யேசுவின் ஆலயத் திறப்பு விழா, பங்குத்தந்தை அருட்திரு. லடிஸ்லாஸ் அடிகளாரின் தலைமையில் சித்திரைத் திங்கள் 22—ம் நாள் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

பங்கு மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இவ்வாலயத் திறப்பு விழாத் திருப்பலியை சிறப்பித்தனர். முதலில் பக்தர்கள் அனைவரும் புடைசூழ குத்துவிளக்கேற்றி குருவானவரை வரவேற்கும்சடங்கு இடம் பெற்றது. உன்நினைவில் சங்கமிக்கும் என் இதயம் என்ற பாடல் ஆலயமெங்கும் எதிரொலிக்க திருப்பலி ஆரம்பமாகியது. மத வேறுபாடின்றி இந்துசமய மக்கள் பலரும் இத்திருப்பலியில் பயபக்தியுடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

திருப்பலியில் பங்குத்தந்தை தமது மறையுரையில் குழந்தை யேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். குழந்தை யேசுவைப் போல குழந்தை உள்ளம் கொண்டவர்களாக இறையரசைத் தேடவேண்டுமென எடுத்துரைத்தார். திருப்பலியின் முடிவில் குழந்தை யேசுவின் ஆசீரும் வாழ்த்தும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

**செல்வி. அ. மேரி**
முதலியார்குளம்

## கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத்தல விழா

22-05-90 — 31-05-90

### சிந்தனைத் தலைப்புக்கள்

| | |
|---|---|
| 22—செவ்வாய்: | கிறிஸ்தவம்: வாழ்வா ? வழிபாடா ?<br>ஆமோஸ் 5: 21—24. லூக். 6: 43—49. |
| 23—புதன்: | சீடத்துவம் ஓர் அர்ப்பணம்.<br>எபே. 1: 3—11; மாற்கு 10: 17—31. |
| 24—வியாழன்: | குரு வழியில் சீடன்<br>பிலி. 2: 1—11; அரு. 13: 1—17. |
| 25—வெள்ளி: | அன்பிற்கு நான் அடிமை.<br>1 அரு. 4: 7—16; லூக். 10: 25-37 |
| 26—சனி: | சிலுவை ஒரு ஏணிப்படி.<br>எபி. 12: 5—13; அரு. 9. 1—7. |
| 27—ஞாயிறு | வளமான வாழ்வில் வாழவைக்கும் இறை வார்த்தை.<br>2. திமோ 4: 1—5; அரு. 1: 1—14. |
| 28—திங்கள்: | கொடுக்கத்தான் கொண்டிருக்கிறாய்<br>1 கொரி. 12: 4—11; மத். 5: 13—16. |
| 29—செவ்வாய் | தேடி வரும் தெய்வம்.<br>1 அரு. 1—5; 2: 2; லூக். 15: 11—24. |
| 30—புதன்: | அன்பிற்கு ஓர் ஆதாரம்.<br>1 கொரி. 11: 23—26; அரு. 6: 47—58. |
| 31—வியாழன் | இறைவனின் தூது—மரியாள்<br>உரோ. 8: 28—30; அரு. 19: 25—28 |

22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் கொடியேற்றமும் திருப்பலியும்

ஒவ்வொரு நாளும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் திருப்பலியும்

**31 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாட்திருப்பலி பேரருட் திரு. L. R. அன்ரனி ஆண்டகை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.**

மறையுரைகளை வழங்கி வழி நடத்துபவர் அருட்திரு. பி. இம்மனுவல் யேசுதாசன் அ. ம. தி. அடிகள்.

ஆலயத்திற்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் கரம்பன் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளாமல் பொருட்கள் எதையும் வாங்க வேண்டாம்.

**கரம்பொன் பங்குத்தந்தை**

# உதவிப் பொருட்களை வழங்க கனரக வாகனங்கள் தேவை

எத்தியோப்பியாவில் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும், வடக்குப் பகுதியில் பட்டினிக் கொடுமையால் வாடுவோருக்கு இடர் உதவிப் பொருட்களை அனுப்பி வைக்க உதவும் வகையில் 100 பார வண்டிகளை அளிக்க வேண்டுமென அந்நாட்டில் செயற்படும் J. R. P எனப்படும் கிறிஸ்தவ உதவி நிறுவனங்கள் இணைந்து முழு உலக நாடுகளை வேண்டியுள்ளது. தற்போது தங்களிடம் உள்ள பாரவண்டிகள் 150 KM தூரத்திற்கு மேல் செல்ல முடியாதவைகளாக இருப்பதால் தலைநகரிலிருந்து வெகு தொலைவிலுள்ள பகுதிகளுக்கு உதவிப்பொருட்களை அனுப்ப புதிய ஊர்திகள் தேவை என்று J. R. P. விடுத்த அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவில் வடக்குப் பகுதியான போலோ மற்றும் சிபிரே மாகாணங்களில் உள்நாட்டுப் போரினாலும், வறட்சியினாலும் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு இடர் உதவி அளிக்கத் தொடங்கிய மார்ச் 20 ஆம் நாளிலிருந்து 887 தொன் உணவுப்பொருட்களே அனுப்பி வைத்திருப்பதாக J. R. P. இயக்குநர் பிரான்சிஸ் செசானோஸ் தெரிவித்தார்.

## மரண ஞாபக அறிவித்தல்

**மே-21**

**திரு. பா. யோ. இம்மனுவேல் அநமைநாயகம்**
1ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி
இளவாலை புனித ஆனாள் ஆலயம், காலை 6 மணி.

**மே. 27**

**குருசுமுத்து அன்ரனிப்பிள்ளை**
7—ம் ஆண்டு நினைவுத்திருப்பலி.
யாழ். அடைக்கல நாயகி ஆலயம் காலை 7.00 மணி.
நாரந்தனை புனித பேதுருவானவர் ஆலயம், காலை.

# மறைபரப்புக்கு மக்களின் பங்களிப்பு

திருச்சபையின் விசுவாசப் பரப்புதல் சபைக்கென அமெரிக்க ஐக்கிய நாட்டின் கத்தோலிக்கர்கள் கடந்த வருடத்தில் 4, 81, 21, 385 டொலர்கள் உதவியை வழங்கியுள்ளதாக நியூயோர்க்கின் துணை ஆயர் உவில்லியம் அறிவித்தார். குருமட மாணவர்களுக்கு உதவுவதற்கென விசுவாசப் பரப்புதல் சபையின் கீழ் இயங்கும் புனித இராயப்பர் சபைக்கென்றும் தனியாகக் கடந்த வருடத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து 33, 30, 051 டொலர்கள் மக்களால் வழங்கப்பட்டதாக ஆயர் கூறினார்.

மக்களின் தாராள மனப்பான்மையால் கிடைக்கும் இந்த நன்கொடைகள் மூலம் உலகில் 300 கோடி அதாவது 60% மக்களுக்கு வளரும் தலத்திருச்சபைகள் நற்செய்தியை அறிவித்து வருகின்றனர் என்றார் ஆயர்.

## அன்னைக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை திரேசாவின் கோசே பயணத்தின் போது கோசே மக்கள் அன்னையின் பிறந்த நாளையும், அவரது அறப்பணி இயக்கத்தின் 40 வது ஆண்டுவிழாவையும் கொண்டாடத்திட்டமிட்டுள்ளார்கள்.

## யூத குடியேற்றத்துக்கு கிறிஸ்தவ எதிர்ப்பு

ஜெருசலேமில் கிறிஸ்தவக் குடியிருப்புப் பகுதியில் யூதர்கள் குடியமர்வதை இஸ்ரேல் அரசு ஆதரிப்பதை எதிர்த்து இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளின், கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் தங்களின் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். கிறிஸ்தவ பகுதிகளில் குடியேறுபவர்களின் நடவடிக்கைகளைக் கண்டிக்கிறோம் என ஒவ்வொரு கிறிஸ்தவ சபைத் தலைவர்களின் கையெழுத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கை உரைக்கிறது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**